**செய்தி வெளியீடு எண்: 894** **நாள்: 12.10.2010.**

## முதலமைச்சர் கலைஞர் அவர்கள் தலைமையில் நடைபெற்ற தமிழக அமைச்சரவைக் கூட்டத்தில் மேற்கொள்ளப்பட்ட முடிவுகள்

மாண்புமிகு முதலமைச்சர் கலைஞர் அவர்கள் தலைமையில் இன்று (12.10.2010) புனித ஜார்ஜ் கோட்டையில் உள்ள செம்மொழித் தமிழாய்வு நூலகக் கூட்ட அரங்கில் தமிழக அமைச்சரவையின் 48–வது கூட்டம் நடைபெற்றது.

இக்கூட்டத்தின் தொடக்கத்தில், “சென்னை புனித ஜார்ஜ் கோட்டை வளாகத்தில், கழக ஆட்சிக் காலத்தில் கட்டி முடிக்கப்பட்ட பத்து மாடிக் கட்டடத்திற்கு "நாமக்கல் கவிஞர் மாளிகை" எனப் பெயர் சூட்டப்பட்டது. அதைப்போலவே; சட்டப்பேரவை மன்றம் இருந்த இடத்தில் அமைக்கப்பட்டுள்ள "செம்மொழித் தமிழாய்வு மத்திய நிறுவனத்தின்" நூலகத்திற்கு "பாவேந்தர் செம்மொழித் தமிழாய்வு நூலகம்" எனப் பெயரிடுவதென” ஒருமனதாகத் தீர்மானிக்கப்பட்டது.

தொடர்ந்து அமைச்சரவைக் கூட்டத்தில்; உதகமண்டலம் இந்துஸ்தான் போட்டோ பிலிம் தயாரிப்பு நிறுவனத்தின் சீரமைப்புக்காக மதிப்புக்கூட்டு வரிச் சலுகை, மின்சார வரிவிலக்கு ஆகிய சலுகைகளை வழங்குவதென்றும்; திண்டுக்கல் மாவட்டம், கரிகாலி கிராமத்தில் அமையவுள்ள சிமெண்ட் தொழிற்சாலை விரிவாக்கத் திட்டத்திற்காக செட்டிநாடு சிமெண்ட் நிறுவனத்திற்கு, மற்ற தொழில் நிறுவனங்களுக்கு வழங்கி வருவதைப் போலவே, மூலதன மானியம், மதிப்புக்கூட்டு வரிச் சலுகை, மின்சார வரிவிலக்கு ஆகிய சலுகைகளை வழங்குவதென்றும் முடிவு செய்யப்பட்டது.

சென்னை மெட்ரோ ரயில் திட்டத்தை வடசென்னைப் பகுதி வண்ணையில் இருந்து திருவொற்றியூர் விம்கோ நகர் வரை நீட்டிக்க கொள்கை அளவிலான அனுமதி வழங்கலாம் என்று இன்றைய அமைச்சரவைக் கூட்டத்தில் முடிவு செய்யப்பட்டது.

ஏற்கனவே நிலவரியாக புஞ்சை நிலங்களுக்கு சராசரியாக ஏக்கருக்கு 15 ரூபாய் என்பதற்கு பதில் 2 ரூபாய் வீதமும், நஞ்சை நிலங்களுக்கு சராசரியாக ஏக்கருக்கு 50 ரூபாய் என்று வசூலிக்கப்பட்டு வந்ததை, 5 ரூபாய் வீதமும் குறைத்து கடந்த ஆண்டு முதல் செயல்படுத்தப்பட்டு வருகிறது. இதைத் தொடர்ந்து, நிலவரியின் மீது வசூலிக்கப்பட்டு வந்த தலவரி மற்றும் தலமேல்வரி ஏற்கனவே ரத்து செய்யப்பட்டதற்கு அமைச்சரவை பின்னேற்பு வழங்கியது.

அதிக தீர்வை, அதிக தண்ணீர் வரி மற்றும் மேம்பாட்டு வரிகளை ரத்து செய்யவும்; பாசன விவசாயிகள் சங்க உறுப்பினர்களிடமிருந்து ஏக்கர் ஒன்றுக்கு கூடுதல் தண்ணீர் தீர்வையாக 70 ரூபாய் வீதம் வசூலிக்கப்பட்டு வருவதை, 15 இலட்சம் விவசாயிகள் பயன் அடையும் வகையில், ரத்து செய்து விடுவதென்றும் அமைச்சரவை முடிவு செய்தது.

முறையற்ற பாசனம் செய்யும் விவசாயிகளிடம் தற்பொழுது வசூலிக்கப்படும் தண்டத் தீர்வையான ஏக்கர் ஒன்றுக்கு 600 ரூபாய் வீதம் வசூலிக்கப்படுவதைக் குறைத்து, ஏக்கர் ஒன்றுக்கு 200 ரூபாய் வீதம் வசூலிக்கவும்; தற்பொழுது நடைமுறையில் உள்ள ஜமாபந்தி முறையை எளிமைப்படுத்தித் தொடரவும்; கிராமக் கணக்குகளில் தேவையற்ற வருவாய்க் கணக்குகளை நீக்கம் செய்யவும், எளிமைப்படுத்தவும் இன்றைய அமைச்சரவைக் கூட்டத்தில் ஒப்புதல் அளிக்கப்பட்டது.

*****

வெளியீடு:–இயக்குநர், செய்தி மக்கள் தொடர்புத்துறை, சென்னை–9